# மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

| | | | |
|---|---|---|---|
| 2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16–ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பு 1–ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண்.44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு. சிவா என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | **வேலுநாச்சியார்** | தொழில்: | |
| த.பெ: | | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**16.10.2025 OS.34/2020 வா.சா.1 ஆஜர்**

**<u>1,2 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1) நான் எனது ஊருக்கு எனது நஞ்சை புஞ்சை நிலங்களை விவசாயம் செய்வதற்காக அடிக்கடி வந்துபோவேன் என்றால் சரிதான். தாவா சொத்து உள்ள ஊரில் எனது உறவினர்கள் இருக்கிறார்களா என்றால் 50 குடும்பத்திற்கு மேல் இருக்கிறார்கள். எனது உறவினார்கள் வீட்டு விஷேசங்களுக்கு அடிக்கடி சென்று வருவேன் என்றால் சரிதான். நான் அவ்வாறு அடிக்கடி ஊருக்கு சென்றுவந்திருந்தால் நத்தம் சர்வே நடந்த 1985 ஆண்டில் 1ம்பிரதிவாதி தாயார் செருவம்மாள் பெயரில் பட்டா ஏற்பட்ட விபரம் எனக்கு தெரியவந்திருக்கும் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. எனது தகப்பனார் உயிருடன் இருந்த காலம் வரை மேற்படி செருவம்மாள் பெயரில் ஏற்பட்ட பட்டாவை ரத்து செய்ய வருவாய் துறையில் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் காலத்திற்கு பிறகு நானும் மேற்படி பட்டாவை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.4 ஆவணத்திற்கும் இந்த வழக்கிற்கும் எந்த வித சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. நான் நான்குமாலை காட்வதற்காக தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வதைபோல் வா.சா.ஆ.4 ஆவணத்தில் நான்குமால் கண்டிருக்கவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் செருவம்மாள் பெயரில் எப்போது பட்டா ஏற்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் பட்டா மாறியது தெரியாது என்பதால் நான் சொல்லவில்லை.

2) செருவாம்மாளுக்கு தாவா சொத்து கிரைய பாத்தியம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் எங்கள் சொத்தின் தெற்கே வேலு என்ற பொன்னையா சேர்வை சொத்து உள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான். வேலு என்ற பொன்னையா சேர்வையின் சொத்துதான் தாவா சொத்து என்றால் சரியல்ல. தாவா சொத்து 1ம் பிரதிவாதியின் தாயார் செருவாம்மாளுக்கு 21.08.1962 மற்றும் 06.08.1963 ஆகிய தேதியிட்ட கிரைய

பத்திரத்தின் மூலம் பாத்தியமானது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் கிழமேல் தென்வடல் அடி அளவுகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தென்வடல் 16 அடி கிழமேல் 24 1/2 அடி ஆகும். மேற்படி அடி அளவுகளுக்கு நத்தம் புல எண். 269/37 ல் எனது தகப்பனார் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரியல்ல. செருவாம்மாள் பெயரில் எந்த நத்தம் சர்வே எண்ணுக்கு பட்டா ஏற்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நத்தம் புல எண். 269/37 க்கு அரசாங்கத்தால் நத்தம் சர்வேயின் போது எனது தகப்பனாருக்கு பட்டா வழங்கப்பட்ட விபரத்தை நான் வழக்கிற்காக மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல.

3) தாவா சொத்திற்கு செருவம்மாள் பெயரில் பட்டா எண்.561 ல் புல எண். 275/29க்கு சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்பாக ஏற்பட்டுள்ளது என்றால் மேற்படி பட்டாவானது மோசடியாக ஏற்படுத்தப்பட்ட ஆவணம். வழக்கு சொத்து விபரத்தில் நான் என்ன புல எண் குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் புல எண்.275/29 என குறிப்பிட்டுள்ளேன். மேற்படி புல எண்ணில் தாவா சொத்தானது பகுதி என குறிப்பிட்டுள்ளேனா முழு புல எண். என குறிப்பிட்டுள்ளேனா என்றால் பகுதியாக தான் குறிப்பிட்டுள்ளேன். அது என் தகப்பனாருக்கு பாகத்தில் கிடைத்ததாகும். தாவா வழக்கு சொத்து விபரத்தில் புல எண்ணில் பகுதியில் எந்த திசை என குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு மேற்பக்கம் எனது பெரியப்பாவிற்கு கிழக்கு பக்கம் ஒதுக்கப்பட்டது. எனது பெரியப்பாவிற்கு பாகத்தில் கிடைத்த சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது பெரியப்பாவின் பெயர் சுப்பிரமணி,துரைச்சாமி ஆகும். நத்தம் புல எண். 269/37 ல் எனது பெரியப்பா துரைச்சாமி மற்றும் எனது தகப்பனார் குருசாமி ஆகியோர் பெயரில் கூட்டாக பட்டா எண். 345 ஆக உள்ளது என்றால் அது எங்கள் சொத்து இல்லை. மேற்படி புல எண் 269/37 தான் எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றாலும் நான் தவறுதலாக 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை எனக்கு பாத்தியப்பட்ட சொத்து என சொல்லி தவறுதலாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வேலு என்ற பொன்னையா சேர்வையிடம் இருந்து செருவம்மாள் இரண்டு பதிவு பத்திரங்கள் மூலம் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. செருவம்மாள் கிரையம் வாங்கிய சொத்தின் விஸ்தீரணம் கிழமேல் 51 அடி தென்வடல் 21 அடி கொண்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. செருவம்மாள் சொத்திற்கு தெற்கே ராமசாமி சொத்து உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. செருவம்மாள் கிரையம் வாங்கிய சொத்தில் ஒரு ஓட்டு வீடு,கூறை வீடு உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. செருவம்மாள் கிரையம் வாங்கிய சொத்தில் உள்ள கூறை வீடு சம்மந்தமாக டி.மு கோர்ட்டில் OS.NO.85/1981 ல் வழக்கு நடைபெற்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கிரைய பாத்தியத்தின் அடிப்படையில் செருவம்மாள் தாவா சொத்தில் ஓட்டு வீடும் ,கூறை வீடும் கட்டி அனுபவித்து வந்தார் என்றாலும் பட்டா பெற்று வரி செலுத்தி வந்தார் என்றாலும் தெரியாமல் மோசடியாக வரி செலுத்தியிருப்பார்கள். செருவம்மாள் 2003 ல்

இறந்தபோன விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. செருவம்மாள் இறந்த பின்னர் அவருடைய வாரிசுகள்சட்டப்படி தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் செரும்மாள் வாரிசுகள் 6 பேர் பெயரில் பட்டா எண். 561 னாக மதிவானன் வகைறயா என கண்டு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4) செருவம்மாளின் பெண் வாரிசுகள் 3 பேரும் தாவா சொத்தை குறித்து 1ம் பிரதிவாதிக்கு பதிவு செய்யப்பட்ட பாக விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தின் மேற்கே இருளப்பன் வகையறா வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி இருளப்பன் வகையறா சொத்தின் பத்திரங்களில் கிழக்கே செருவம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. செருவம்மாளின் மகன் மதிவானனை இவ்வழக்கில் நான் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் அவர் தாவா சொத்திற்கு வரவில்லை என்பதால் அவரை நான் சேர்க்கவில்லை. செருவம்மாளின் ஆண் வாரசுகளான வழக்கில் கண்ட 1,3 பிரதிவாதிகள் மற்றும் மதிவானன் ஆகியோரிடையே பாக பத்திரம் பதிவு செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பாக பிரிவினை பத்திரத்தின் அடிப்படையில் பட்டா மாறியுள்ளது என்றால் மோசடியாக ஏற்படுத்தியுள்ளனர்.

5) வழக்கில் 2ம் பிரதிவாதியாக சேர்த்துள்ள முத்துக்குமாரை நான் ஏன் வழக்கில் சேர்த்துள்ளேன் என்ற விபரத்தை பிராதிலோ நிரூபணவாக்குமூலத்திலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி முத்துக்குமார் தாவா வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எந்த வித உரிமையும் அனுபவமும் இல்லாததால் எனக்கு வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கதக்கது இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam